**<u>சுருக்கம்</u>**

மாற்றுத் திறனாளிகள் நலன் – 2014–15 ஆம் ஆண்டிற்கான பகுதி–II திட்டம் – புதுக்கோட்டை பார்வையற்றோருக்கான அரசு தொடக்கப் பள்ளிக்கு சொந்த கட்டிடம் கட்டுதல் – நிதி ஒப்பளிப்பு செய்வது – ஆணை– வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை**

**அரசாணை (நிலை) எண்.54** **நாள்: 02.09.2014**

**ஜய–ஆவணி 17, திருவள்ளுவர் ஆண்டு, 2045**

**படிக்க :**

1. மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.3) துறை, அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.13753/மா.தி.ந.3/2013–5, நாள் 27.5.14.
2. நிதித் துறையிடமிருந்து பெறப்பட்ட பகுதி–II திட்டத்தின் பட்டியல்.

---

**<u>ஆணை:</u>**

மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் 2014–15 ஆம் ஆண்டிற்கான பகுதி–II திட்டத்தின் கீழ் புதுக்கோட்டை பார்வையற்றோருக்கான அரசு தொடக்கப் பள்ளிக்கு சொந்த கட்டிடம் கட்டுவது தொடர்பாக செயற்குறிப்பினை பின்வருமாறு தெரிவித்துள்ளார்:–

"புதுக்கோட்டை, பார்வையற்றோருக்கான அரசு தொடக்கப் பள்ளி தற்போது வாடகை கட்டிடத்தில் இயங்கி வருவதாகவும், இப்பள்ளிக்கு சொந்த கட்டிடம் கட்டுவதற்கென புதுக்கோட்டை, மாவட்ட ஆட்சியர் 20250 சதுர அடி பரப்பளவு இடத்தினை பார்வையற்றோர் சிறப்புப் பள்ளி கட்ட ஒதுக்கீடு செய்துள்ளதாகவும், மேற்கண்டவாறு பெறப்பட்ட நிலத்தில், தங்குமிடத்துடன் கூடிய சொந்த கட்டிடம் கட்டுவதற்கென பொதுப் பணித்துறை (கட்டிடங்கள்) தோராய மதிப்பீடாக ரூ.90.00 இலட்சங்கள் செலவினமாகும் என தெரிவித்து, 2014–15 ஆம் ஆண்டிற்கான பகுதி–II திட்டத்தின் கீழ் புதுக்கோட்டை பார்வையற்றோருக்கான அரசு தொடக்கப் பள்ளிக்கு சொந்த கட்டிடம் கட்ட ஏதுவாக ரூ.90.00 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யுமாறு அரசை கேட்டுக் கொண்டுள்ளார்''.

2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலித்து, அரசு அதனை ஏற்று, புதுக்கோட்டை பார்வையற்றோருக்கான அரசு தொடக்கப் பள்ளிக்கு சொந்தமாக கட்டிடம் கட்டுவதால், தற்போது வாடகை கட்டிடத்திற்கு வாடகையாக செலுத்திவரும் தொடர் செலவினத்தை குறைக்க இயலும் என்பதனை கருத்தில் கொண்டு, புதுக்கோட்டை பார்வையற்றோருக்கான அரசு தொடக்கப் பள்ளிக்கு சொந்தமாக கட்டிடம் கட்ட ரூ.90.00 இலட்சத்தை (ரூபாய் தொண்ணூறு இலட்சம் மட்டும்) 2014–15ம் ஆண்டிற்கான பகுதி–II திட்டத்தின் கீழ் நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

[த.பி.பா]

3. மேலே பத்தி 2–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ் காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

**4235– சமூக பாதுகாப்பு நலன் குறித்த மூலதனச் செலவு – 02–சமூக நலன் – 101– மாற்றுத் திறனாளிகள் நலன் –பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் – JV-அரசு பார்வையற்றோர்களுக்கான துவக்கப் பள்ளிக்கு சொந்த கட்டடம் கட்டுதல் –16–பெரும் பணிகள் (து.தொ.கு 4235 02 101 JV 1609).**

4. மேலே பத்தி 2–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

5. இவ்வாணை நிதித் துறையின் அலுவல் சார்பற்ற எண்.35592/நிதி(சந)/2014, நாள் 03.07.2014–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பொ. சிவசங்கரன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

**பெறுநர்**
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
தலைமைப் பொறியாளர், பொதுப் பணித் துறை (கட்டிடங்கள்), சென்னை–5.
மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர், புதுக்கோட்டை
(மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–35.
தலைமைக் கணக்காயர், சென்னை–18.
தலைமைக் கணக்காயர், சென்னை–18 (பெயரில்)
**நகல்:**
நிதி (சந)த் துறை, சென்னை–9.
அரசு முதன்மைச் செயலாளர் அவர்களின் தனிச் செயலாளர்,
மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.